# THE PROBLEMS CREATED BY DUAL ROLE OF WORKING WOMEN: A SOCIOLOGICAL STUDY BASED ON THE KINNIYA SECRETARIATE AREA

**NL.Fahmiya[1]& AWN. Naleefa[2]**
[1,2]Faculty of Ats and Culture, South Eastern University of Sri Lanka,
*nlfahmi@gmail.com, najeefarala@gmail.com*

**ABSTRACT:** This paper examines the Problems of Working Women due to her dual role. The human society has understood that everyone has to work for fulfilling their economic requirements. Raising the cost of living needs the women participation in the employment opportunities to tackle the family income constraints. As a result, they have to balance between work domain and family life domain. Hence, this research based on the issue and solution of the employed women in government, non-government and private sectors in kinniya secretariat. The primary objective of this research identifying what kind of problem created by dual role and their causes and solution are the sub objectives. A mixer quantitative and qualitative method was used for the study. Primary data collected through questionnaire survey, in depth interviews based on questionnaire and indirect observation. Secondary data collected through reports, magazines, articles etc. Purposive sampling used to supply questionnaire. Collected data analyze by using MS-Excel and thematic highlighting. Finally, the study revealed that the dual role of working women are causes to face problems individually, family, socially, psychologically and religious wise. Even through women servant are very powerful, respected and feared organizations because of their gender identity they have to bear most of the problems as other women in society. Recommendations such as social awareness initiatives, getting husband' help, establishing day care centers, etc. It is hoped that the findings of this study will assist the human resource managers, practitioners and strategy makers to better understand women problems.

**Keywords**: Dual Role, Working Women, Thematic Highlighting, Gender Identity, Kinniya

## 1. அறிமுகம்(INTRODUCTION)

மனிதன் சமூக , பொருளாதார , உடலியல் , உளவியல் மற்றும் அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட தேவைகளை உடையவனாகக் காணப்படுகின்றான். அந்தவகையில் மனிதனுக்கு அத்தியவசியமான அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் யாவையும் பெற்றுக் கொள்ள வருமானம் தேவை. இந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ள ஒரு தொழில் தேவை. இன்றைய காலகட்டத்தை பொருத்தவரை வாழ்க்கைச் செலவு வீதமும் பொருளாதார நெருக்கடியும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இதனால் ஆண்களின் உழைப்பினால் மட்டும் இன்றைய நாகரீக உலகில் வாழ முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. இதனால் ஆண்களைப் போலவே பெண்களும் வேலைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் வேலைக்குச் செல்லும் வீதம் அதிகரித்துள்ளது.

பெண் கல்வி கற்று உயர்ந்த நிலையினை வேலைக்குச் செல்வதன் மூலம் பெறுகிறாள். பெண்கள், ஒழுங்காக கூலி அல்லது சம்பளம் பெறும் வேலையாட்கள், இடைவரவு வேலையாட்கள், சொந்த சிறு தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் கூலி பெறாத குடும்ப லேையாட்கள் என பல்வேறுபட்ட அடிப்படைகளில் வேலைகளில் பங்கேற்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் 59.4% ற்கும் மேலான பெண்கள் அரச,அரச சார்பற்ற துறைகளில் பணி புரிகின்றனர். ஆரம்ப நூற்றாண்டுகளில் 30-32% பெண்கள் ஊழியப்படையில் இருந்தனர். இதன் தொகையானது 1950 களில் அதிகரிக்க ஆரம்பித்தது பின் 1970 களில் திடீரென மிகையன வளர்ச்சி ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் சுமார் 40% மாக இத்தொகை காணப்பட்டது. 2006 ம் ஆண்டு கணிப்பீட்டின் படி உலகில் 2.9 பில்லியன் பணி புரிவோரில் 1.2 பில்லியன் பேர் பெண்களாக இருந்தனர். (ILO,2006)

இவ்வாறு வேலைக்குச் செல்லும் பெண்கள் இரட்டை வகிபாகத்தினை (DUAL ROLE) ஏற்பது தவிர்க்க முடியாததாகின்றது. இதன் காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் குடும்ப, சமூக,உள மற்றும் பண்பாட்டு ரீதியாக பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது. இது தேசிய,சர்வதேச ரீதியில் பாரியதொரு பிரச்சினையாக உள்ளது.

பெண்கள் வெளியில் வேலை செய்யும் அதே வேளை கூடவே பெரும்பான்மையான வீட்டு வேலைகளையும் இவர்களே செய்ய நேரிடுகிறது. இதனையே இரட்டை வகிபாகம் (DUAL ROLE)

என்பர். அதாவது குடும்பச் சுமையை குறைப்பதற்காகவும் ஏனைய காரணங்களுக்காகவும் வேலைக்குச் செல்லும் பெண்ணுக்கு வீடு திரும்பியதும் சமைத்தல், துவைத்தல், குழந்தைகளைப் பராமரித்தல், வீட்டை சுத்தம் செய்தல் மற்றும் முதியோர், கணவன்மாரைக் கவனித்தல் போன்றன அன்றாட கடமைகளாகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் தான் வேலைக்குச் செல்லும் பெண்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கினிறனர். குறிப்பாக மிதமிஞ்சிய வேலைப்பளுவினால் உடல் பலவீனம் அடையும் பெண்கள் வயது ஏற ஏறத் தங்களால் வீட்டு வேலைகளைத் தனியாக கவனிக்க முடியாமல் அலுப்பும் சலிப்பும் அடைகின்றனர். இது படிப்படியாக வளர்ந்து அவர்களிடம் ஒரு விரக்தியை ஏற்படுத்தி விடுகின்றது. இது இங்கு மட்டுமல்ல அநேக நாடுகளிலும் இருக்கும் ஒன்றுதான். வெளிநாடுகளில் இடம் பெறும் பல விவாகரத்துக்களுககும் இது போன்ற பிரச்சினைகள் தாம் முக்கிய காரணங்களாகின்றன. அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மன், சுவீடன் போன்ற நாடுகளில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும் 99% விவாகரத்து கோரப்படுவதில்லை.

மேலும் பிள்ளைகளை பராமரிக்க நேரமின்மையால் அவர்கள் பிறழ்வான நடத்தைக்குள்ளாகுதல், கணவன் மனைவி மீது சந்தேகம் கொள்ளுதல், குடும்பம் சீர் குழைதல், நோய்வாய்ப்படல், சமூகத்தின் தவறான பார்வைக்குள்ளாகுதல் போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

எனினும் மத்தியதர உயர்த வர்க்கப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களை வைத்திருத்தல், குழந்தைப் பராமரிப்பு இல்லங்கள் காணப்படுதல் போன்றவற்றினால் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வது குறைவாகும். தாழ் வர்க்கப் பெண்களுக்கு அந்த அளவிற்கு பொருளாதார வசதி இன்மையால் வேலைக்குச் செல்லும் பெண்கள் இரட்டை வகிபாகத்தினால் அதிகம் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

ஒரு ஆய்வாளன் என்ற வகையில் சமூகத்தின் அறிவுப் புலத்தை வெளிப்படுத்த வேண்டும் எனும் நோக்கில் சமூகவியல் எல்லைக்குள் நின்று குறித்த பிரதேசத்தில் அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் வேலை செய்யும் பெண்களை ஆய்வு செய்து அவர்களின் மீது இரட்டை வகிபாகம் ஏற்படுத்தும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அதற்கான தீர்வுகளை முன்வைத்து அதனை ஆவணப்படுத்த வேண்டும் எனும் நோக்குடன் இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பு நுட்பங்களும் (METHODOLOGY)


இது சமூக விஞ்ஞான ஆய்வு(Social science research) என்ற வகையில் இங்கு பண்புசார் ஆய்வு முறை (Qualitative research method) மற்றும் அளவுசார் ஆய்வு முறை (Quantitative research method) என்பன கையாளப்பட்டுள்ளன. இவ்வாய்வு வெளிக்கள ஆய்வுத்தரவுகளை பிரதான மூலமாகவும், ஏனைய தரவுகளை இரண்டாம் தர துணைச்சாதனமாகவும் கொண்டு பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குறித்த ஆய்வுப் பிரதேசமாக றெகுமானியா நகர், சின்னக் கிண்ணியா, கட்டையாறு, மாஞ்சோலை, மாஞ்சோலைச்சேனை, மஹரூப் நகர், பைசல் நகர், அண்ணல் நகர், பூவரசந் தீவு, சமாச்ச தீவு, ஆலங்கேனி, உப்பாறு, சமாச்ச தீவு ,ஈச்சந் தீவு, நடுஊத்து, பெரியாற்று முனை, எகுத்தார்நகர், பெரியகிண்ணியா, மாலிந்துறை, கிண்ணியா, குட்டிக்கராச்சி, இடிமன், குரிஞ்சக்கேனி, நடுத்தீவு, முனைச்சேனை, கச்சக்கொடித்தீவு, காக்காமுனை, மஹரூப் கிராமம், மனியரசன்குளம், சூரங்கால், மற்றும் ஆயிலியடி ஆகிய பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது சமூகவியல் ரீதியான ஆய்வாக இருக்கின்ற காரணத்தினால் கள ஆய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிண்ணியாப் பிரதேசத்தில் அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் இரட்டை வகிபாகத்தினால் எதிர்கொள்ளும் பிரச்சிரனைகள், அதற்கான காரணங்கள் பற்றியும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வினாக்கொத்து(questionare), நேர்காணல்(interview),அவதானம்(observation) போன்ற முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகள் கையாளப்பட்டுள்ளன. மாதிரி எடுத்தல் கோட்பாட்டின் படி மொத்த குடித்தொகையில் இருந்து பத்து வீத மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 71704 மொத்த சனத்தொகையில் 35708 பேர் பெண்களாக உள்ளனர். இதில் 515 பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர். வரைபு 1 ற்கு ஏற்ப வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட வேண்டும் எனினும் ஆய்வாளனின் குறைந்த அனுபவம், குறுகிய காலம், செலவு மற்றும் கல்விசார் ஆய்வு என்பனவற்றை கருத்திற் கொண்டு நோக்க மாதிரியின் (Purposive Sampling) அடிப்படையில் 30 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள குடித்தொகைக்கு ஏற்ப வினாக்கொத்துக்கள் பகிரர்ந்தளிக்கப்பட்டன.

**வரைபு1**

மாதிரிகளினுடைய விநியோகம் (30வினாக்கொத்துக்கள்)




Source:-Grama Niladharies, DS, Kinniya 2011

மேலதிக தரவுகள் வினாக் கொத்தினை மையமாகக் கொண்ட கேள்விகளின் துணையுடன் பிரதான தகவலாளிகளிடமிருந்து (Key Informants) ஆழமான நேர்காணல் முறை மூலம் பெறப்படவுள்ளன. பின்வரும் அடிப்படையில் குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.மருத்துவர்கள் - 02, அதிபர்கள் – 02, தாதிமார்கள் - 02, பொது சுகாதார மருத்துவ மாது –02, நெசவு போதனாசிரியர் - 01, பெண்கள் அபிவிருத்தி அதிகாரி-01.

இன்னும் பல தரவுல்கள் இலகுவான முறை என்ற அடிப்படையில் மறைமுக அவதானத்தின் (Indirect Observation) மூலமும் பெறப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைத் தரவுகளானவை, ஆய்வுக்கு வலிமை சேர்க்கும் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த வகையில் கிண்ணியாப் பிரதேசத்தில் பெண்களின் வேலைவாய்ப்பானது எவ்வாறு காணப்படுகின்றது? மற்றும் ஆய்வுப் பிரதேசம் பற்றிய விடயங்கள் என்பனவற்றினை அறிந்து கொள்வதற்காக புள்ளிவிபரங்கள் அடங்கியுள்ள நூல்கள், பிரதேச செயலக வள அறிக்கைகள், புத்தகங்கள், இதழ்கள், கட்டுரைகள், இணைய தகவல்கள் மற்றும் வெளியீடுகள், முன்னர் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், பிற ஆவணங்கள் போன்றவற்றிலிருந்தும் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறாக சேகரிக்கப்பட்ட தரவுகள் அதிகமானவை பண்புசார் தரவுகளாக இருக்கும் என்ற காரணத்தினால் மையக் கருப்பொருளை வைத்து (Thematical Highlighting) சாதாரணமான (Manual) முறையிலும்,MS-EXCEL மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்படவுள்ளன.

### 3. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்(Results and Discussion)

ஆய்வுக்குட்படுத்திய பெண்களின் தனிப்பட்ட விபரங்கள் வேலைக்குச் செல்லும் பெண்களின் மீது இரட்டை வகிபாகம் ஏற்படுத்தும் பிரச்சினைகள் மற்றும் இப்பிரச்சினைக்கான காரணங்கள் ஆய்வின் முடிவுகளாகக் கொள்ளப்படுகின்றன.

தகவல் தந்தவர்களின் பொதுவான விபரங்கள் பின்வரும் அட்டவணைகள் மூலம் காட்டப்படுகின்றன.

**அட்டவணை 1**

| ***வயது*** | ***வீதம் (%)*** |
|---|---|
| 30 வயதிற்கு கீழ் | 13.3 |
| 30 – 35 | 43.3 |
| 36 - 40 | 16.7 |
| 41 – 45 | 13.3 |

| | |
|---|---|
| 46 – 50<br>50ற்கு மேல் | 6.7<br>6.7 |
| ***திருமண அந்தஸ்த்து*** | ***வீதம் (%)*** |
| திருமணமானவர்கள்<br>திருமணமாகாதவர்கள் | 83.3<br>16.7 |
| ***குழந்தைகளின் எண்ணிக்கை*** | ***வீதம் (%)*** |
| 00 - 01<br>02 - 04<br>04 ற்கு மேல் | 23.3<br>66.7<br>10.0 |
| ***அனுபவம் (வருடம்)*** | ***வீதம் (%)*** |
| 01 – 05<br>06 - 10<br>11 – 15<br>16 - 20<br>21 - 25 | 53.3<br>30.3<br>6.7<br>6.7<br>3.0 |
| ***கணவன் அல்லது பாதுகாவலர் தொழில்*** | ***வீதம் (%)*** |
| சேவை<br>ஆசிரியர்<br>வைத்தியர்<br>போறியியலாளர்<br>ஏனையோர் | 36.7<br>33.3<br>10<br>3.3<br>16.7 |

இவ் அட்டவணையின் அடிப்படையில் அதிகமாக 30 – 35 வயதிற்கு இடைப்பட்ட 43.3% ஆனவர்கள் தொழில்புரிகின்றனர். இவர்களில் 83.3%மானவர்கள் திருமணமானவர்களாகவும் 27.7% மானவர்கள் திருமணம் ஆகாதவர்களாகவும் உள்ளனர். 66.7%மானவர்கள் 2 – 4 குழநந்தைகளை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். அதே போன்று 53.3%மானவர்கள் 01 – 05 வருட அனுபவம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.


**வேலைக்குச் செல்லும் பெண்களின் இரட்டை வகிபாகம் ஏற்படுத்தும் பிரச்சினைகள்**

**தனிப்பட்ட மற்றும் குடும்பப் பிரச்சினைகள்**

1. **குழந்தை பராமரிப்பு**

**வரைபு 2**

**வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக குழந்தைப் பராமரிப்பில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளனவா?**




இவ்வரைபின் படி 77 சதவீதமானவர்கள் வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக குழந்தைப் பராமரிப்பில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன எனவும் 23 சதவீதமானவர்கள் இதற்கு மாற்றமான கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

**2. ஓய்வு நேரம்**

நேர்காணலின் அடிப்படையில் 86.7% மான பெண்கள் தமக்கு ஓய்வு நேரம் கிடைப்பது அரிது என்று குறிப்பிட்டனர்.

**3. கணவன் - மனைவி உறவு**

**அட்டவணை 2**

| வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக கணவன் மனைவி உறவில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது? | அதிகரித்துள்ளது (%) | குறைவடைந்துள்ளது (%) | மாற்றமில்லை (%) |
|---|---|---|---|
| | 23.3 | 63.3 | 13.3 |

வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக கணவன் மனைவி உறவில் நெருக்கம் குறைவடைந்துள்ளது என 63 சதவீதமானவர்களும் 23 வீதமானவர்கள் பொருளாதார விருத்தியினால் எவ்வித பிரச்சினைகளும் இன்றி உறவில் நெருக்கம் அதிகரித்துள்ளது எனவும் பதிலளித்தனர்.

**4. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு**

**அட்டவணை 3**

| வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக பெற்றார் - பிள்ளை உறவில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது? | அதிகரித்துள்ளது (%) | குறைவடைந்துள்ளது (%) | மாற்றமில்லை (%) |
|---|---|---|---|
| | 16.6 | 76.8 | 6.6 |

இரட்டைச் சுமை காரணமாக பெற்றார் - பிள்ளை உறவு குறைவடைந்துள்ளது என 77 சதவீதமானவர்கள் பதில் அளித்துள்ளனர். ஆதிகரித்துள்ளது என 17 சதவீதமானவரகளும் குறிப்பிட்டனர்.

**5. குடும்ப மற்றும் அயலார் உறவு**

இவ்வாய்வின் அடிப்படையில்வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக 86.7% மானவர்கள் குடும்ப மற்றும் அயலார் உறவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் 13.3% மானவர்கள் அவ்வாறான மாற்றம் இல்லை என்றும் பதிலளித்தனர்.

**சமூக ரீதியான பிரச்சினைகள்**

1. **கருவளவாக்கம்**

**அட்டவணை 4**

| வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக கருவளவாக்கத்தில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது? | அதிகரித்துள்ளது (%) | குறைவடைந்துள்ளது (%) |
|---|---|---|
| | 16.7 | 83.3 |

வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் காரணமாக கருவளவாக்கத்தில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்ற கேள்விக்கு 83 சதவீதமான பெண்கள் குறைவடைந்துள்ளது எனவும் 17 சதவீதமான பெண்கள் அதிகரித்துள்ளது எனவும் பதிலளித்தனர். இவ்வாறாக இரட்டை வகிபாகமானது கருவளவாக்கத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்ப காலங்களுடன் ஒப்பீடு செய்கையில் கருவளவாக்கம் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

**2. சமூகப் பழக்கவழக்கங்கள்**

வீட்டு வேலை மற்றும் வேலைக்குச் செல்லுதல் சமூகப் பழக்கவழக்கத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என 60% மானவர்கள் கருத்து தெரிவித்தனர்.

**உளவியல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்**

1. **சமூக உளப்பாங்கு**


ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள வேலைக்குச் செல்லும் பெண்களை குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலைக்குச் செல்லும் பெண்களை சமூகம் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றது என 63.3% மானவர்கள் கருத்து தெரிவித்தனர்.

2. **மன அழுத்தம்**

ஆய்வுப் பிரதேசத்தில் வேலைக்குச் செல்லும் பெண்களில் 93.3% மானவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகி இருப்பதனை அறிய முடிந்தது.

3. **சுகாதார செயற்பாடுகளும் நோய்களும்**

**வரைபு 3**




வரைபு 3 இன் படி பெண்களின் வேலைப்பளு காரணமாக நவீன சமையல் சாதனங்கள் துரித உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதால் மேற்குறிப்பிடப்பட்ட உடலியல் மாற்றங்களால் அவதியுறுகின்றனர்.

**மத மற்றும் பண்பாட்டு ரீதியான தாக்கம்**

1. **மத ரீதியான தாக்கம்**

பெண்களின் இரட்டை வகிபாகம்மதப்பற்று மற்றும் மதச்செயற்பாடுகளில் பாதகமான விளைவினை ஏற்படுத்தியுள்ளது என 71% பெண்களும் அவ்வாறன விளைவுகள் ஏற்படவில்லை என 29% மான பெண்களும் குறிப்பிட்டனர்.

**வேலைக்குச் செல்லும் பெண்களின் மீது இரட்டை வகிபாகம் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கான காரணங்களாக பின்வருவன அடையாளங்காணப்பட்டுள்ளன.**

1. **கணவனின் ஆதரவு குறைவு**

***அட்டவணை 5***

| வீட்டு வேலைகளில் உங்கள் கணவனின் ஆதரவு எவ்வாறு உள்ளது? | அதிகம்(%) | குறைவு (%) | ஓரளவு (%) |
|---|---|---|---|
| | 6.6 | 80 | 13.4 |

ஆய்விற்குட்படுத்தப்பட்ட 80 சதவீதமானவர்கள் வீட்டு வேலைகளில் தமது கணவனின் ஆதரவு குறைவாக உள்ளது என பதிலளித்தனர். 13.4 சதவீதமானவர்கள் ஓரளவு காணப்படுவதாகவும் 6.6 சதவீதமான பெண்கள் தமது கணவன்மார் பூரண ஒத்துழைப்புத் தருவதாகவும் குறிப்பிட்டனர்.

2. **தனிக்குடும்ப முறையும் கூட்டுக் குடும்பத்தின் சிதைவும்**

ஆய்வுப்பரதேசத்தில் பல்வேறு காரணங்களால் கூட்டுக் குடும்ப முறை சிதைவுற்று 90 சதவீதமான பெண்கள் தனிக்குடும்பத்தில் வாழ்கின்றனர் இதனால் குழந்தை வளர்ப்பு மற்றும் கருவளவாக்கம் பாரிய பிரச்சினைகளாக உள்ளன.

3. **திட்டமிடல்**

வேலைக்குச் செல்லும் பெண்களிடம் சரியான திட்டமிடல் இன்மையினால் இரட்டை வகிபாகம் பிரச்சினையாக உள்ளது என நேர்காணல் மூலம் அறியக் கிடைத்தது.

4. **பொருளாதார வசதி**

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு மற்றும் வரவிற்கு எற்ப செலவுகள் இருப்பதால் கடின சூழலில் கூட பணிப் பெண்களை வைத்திருக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக தகவலாளிகள் கூறினர்.

5. **குழந்தை பராமரிப்பகங்கள் இன்மை**

ஆய்வுப் பிரதேசத்தில் முறையான குழந்தைகாப்பகங்கள் இன்மை வேலைக்குச் செல்லும் பெண்கள் இரட்டை வகிபாகத்தினால் பிரச்சினைகளை எதிர் கொள்ள காரணமாக இமைகின்றது என 76.6

சதவீதமான தகவலாளிகள் கூறுகின்றனர். கூட்டுக் குடும்பத்தில் வசிப்பவர்கள் அது தமக்கு பிரச்சினை இல்லை என பதிலளித்தனர்.

**6. சமூக கருத்தியல்கள்**

கணவன் மனைவிக்கு உதவி செய்வது சமூகத்தில் கூடாத விடயமாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வாறு உதவுபவர்களை ''பொண்ணன்'' என சமூகத்தினர் அழைப்பதாக தகவலாளி ஒருவர் குறிப்பிட்டார்.

**7. குடும்பத்தின் ஒத்துழைப்பு இன்மை**

குடும்பத்தினர் தூர இடங்களில் வசித்தல் போன்ற காரணங்களால் அவர்களின் ஆதரவுகுறைவாக இருப்பதாக சிலர் கூறினர்.

**8. போக்குவரத்து**

தூர இடங்களில் வேலை செய்யும் பெண்கள் தமது பணி புரியும் இடங்களுக்குச் செல்ல அதிக நேரம் எடுப்பதாகவும் அதற்காக வாகனங்களை காத்திருத்தல் அதற்காக ஏற்படும் செலவுகளால் இரட்டை வகிபாகம் பாரிய பிரச்சினையாக இருப்பதாக பதிலளித்தனர்.

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை வேலைக்குச் செல்லும் பெண்கள் கூட்டுக் குடும்ப முறை சிதைவு தனிக்குடும்ப முறை பொருளாதார வசதியின்மை வீட்டு வேளைகளில் கணவனின் ஆதரவு குறைவு போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக இரட்டை வகிபாகத்தினால் தனிப்பட்ட குடும்ப சமூக உளவியல் மத மற்றும் பண்பாடு ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர்.

## 4. முடிவுரைகளும் விதந்துரைப்புக்களும்(Conclusion and Recommendation)

உலகமானது இன்று பல்வேறு விதமான மாற்றங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் உள்ளாவதோடு நாளுக்கு நாள் சமூக அமைப்பும் மாறிக் கொண்டு வருகின்றது. இதனால் சமூகத்தின் தேவையும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. ஆகையால் ஆரம்ப காலத்தில் ஆண் மாத்திரம் தொழிலுக்குச் செல்லுதல் என்ற நிலை மாறி பெண்ணும் வேலைக்குச் செல்லுவது காலத்தின் கட்டாயத் தேவையாயுள்ளது. இதனால் அரச அரச சார்பற்ற தனியார் துறைகளில் பெண்கள் வேலையில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு வேலைக்குச் செல்வதால் பெண்கள் தனிப்பட்ட குடும்ப சமூக உளவியல் மத மற்றும் பண்பாடு ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளாக பின்வருவன அடையாளம் காணப்பட்டுள்ளன.

1.வேலைக்குச் செல்லும் பெண்களின் இரட்டை வகிபாகம் ஹ குழந்தைப் பராமரிப்பில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

2. கணவன் மனைவி மற்றும் பெற்றார் பிள்ளைகளிற்கிடையிலான உறவில் பாரிய இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளது.

3. பெண்களின் இரட்டை வகிபாகமானது கருவளவாக்கத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்ப காலங்களுடன் ஒப்பீடு செய்கையில் கருவளவாக்கம் குறைவடைந்துள்ளது.

4.இன்றைய தனிக்குடும்ப முறையின் காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் காலை தொடங்கி இரவு நித்திரைக்குச் செல்லும் வரையான அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதனால் ஓய்வு நேரம் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

5. இரட்டை வகிபாக் காரணமாக குடும்பம் மற்றும் அயலவர்களுக்கிடையிலான உறவில் நெருக் கம் குறைவடைந்துள்ளது.

6. பெண்களின் வேலைப்பளு காரணமாக நவீன சமையல் சாதனங்கள் துரித உணவுப் பழக்கவழக்கங்களை பின்பற்றி வருகின்றனர். இதனால் ஆரம்ப காலங்களில் பேணப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்கள் கைவிடப்பட்டுள்ளன. இதன் காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் ஆரோக்கிய இடரை எதிர்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

7.அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலைசெய்யும் பெண்கள் பற்றிய தவறான சமூகக் கண்ணோட்டம் காணப்படுகின்றது.

இவ்வாறு வேலைக்குச் செல்லும் பெண்கள் இரட்டை வகிபாகம் காரணமாக பலவேறுபட்ட கோணங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இது பெண்களின் திறன்களையும் வாய்ப்புக்களையும் குறைத்து விடுகின்றது. இது தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற போது தேசிய ரீதியில் விருத்தியினையும் வளங்களினையும் மழுங்கடித்துவிடுகின்றது. எனவே வேலைக்குச் செல்லும் பெண்களை மனித மூலதனமாக்குவதற்கு குறிப்பிட்ட சகல நடவடிக்கைகளை கவனத்திலட எடுக்க வேண்டும். ஆகையால் வேலைக்குச் பெண்களின் மீது இரட்டை வகிபாகம் ஏற்படுத்தும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பின்வரும் விதந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

1.தொழில் புரியும் பெண்களுக்கு ஏற்படும் தொழில் மற்றும் குடும்ப ரீதியாக ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்க கணவன்மார்கள் முன்வர வேண்டும்.

2. ஆண்களும் பெண்களின் வீட்டு வேலைகள் குழந்தை பராமரிப்பு போன்ற விடயங்களில் உதவி செய்தல்.

3. வேலைக்குச் செல்லும் பெண்களின் மதப்பற்றினை அதிகரிக்க மதக் குழுக்கள் முனைப்புடன் செயற்படல்.
4. வேலைக்குச் செல்லும் இடங்களில் மதக் கிரிகைகளை மெற்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தல்
5. குழந்தைப் பராமரிப்பு நிலையங்களை ஆய்வுப் பிரதேசத்தில் ஏற்படுத்தல்.
6. பெண்களுக்கு வலுவூட்டல்
7. கணவன் மனைவி மறறும் பெற்றோர் பிள்ளைகள் என்பர்களுக்கிடையிலான புரிந்துணர்வு விட்டுக்கொடுப்பு மற்றும் சகிப்புத் தன்மை ஆகிய பண்புகளை வளர்த்தல்.
8. அடிக்கடி குடும்ப உறவுகளை வீட்டிற்கு அழைப்பதும் அவர்களை தரிசிக்க செல்வதும் குடும்ப உறவுகளை வலுவடையச் செய்யும்.
9. திட்டமிட்ட அடிப்படையில் தமது வேலைகளை சரிவர றிறைவேற்றுதல்.
10. பெண்கள் பற்றிய தவறான சமூகக் கண்ணோட்டத்தினை நீக்குவதற்கு சமயோசிதமாக சிந்திக்கும் மனப்பாங்கை சமூகத்தில் உள்ள அனைத்து அங்கத்தவர்களும் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

எனவே அரச அரசசார்பற்ற தனியார் துறைகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்களிள் இரட்டை வகிபாகம் தனிப்பட்ட குடும்ப சமூக உளவியல் மத மற்றும் பண்பாடு ரீதியாக ஏற்படுத்தும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேலே குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி பெண்களை வலுவூட்டுவதன் மூலம் சீரான சமூகத்தினை கட்டியெழுப்பலாம். ஆகவே எனது இந்த ஆய்வானது முற்றுப்பெற மாட்டாது. இத்துறையில் மேற்கொள்ளப்படும் எதிர்கால ஆய்வுகளுக்கும் ஆய்வாளனுக்கும் சிறந்த முன்னோடியாக அமையும். தோடர்ந்து இத்தலைப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் மேலும் சிறந்த முடிவுகளைப் பெறலாம்.

## 5. உசாத்துணைகள் (References)


1. Shankar Rao, CN.(2008) Sociology: Principles of Sociology with an introduction to social Thought. New Delhi: sage publications.

2. Ramani Jayathilaka. (1999) Labor Legilation and Female Employment in Sri Lanka's Manufacturing Sector. Institute of Policy Studies.

3. Phyllis Moen. (1989) Working parents. University of Wisconsin Press.

4. Sharmila Rege. (2003) Sociology of Gender: The Challenge of Feminist Sociological Knowledge. New Delhi: sage publications.

5. Mary Evans. (2003) Gender and Social Theory, New Delhi: Rawat Publications.

6. KamlaBhasin. (1993) what is patriarchy? New Delhi: Women Unlimited (An Associate of Kali for women).

7. Gilman, Charlotte Perkins. (1998) Women and Economis – A study of the Economic relationship between men and women as a factor in Social Evaluation. Barkeley: University of California.

8. Onway, john Fredrick. (2003). The Canadian Family in Crisis. James Lorimer & amp Company.
9. செல்வி திருச்சந்திரன். (1993) பெண் அடிமையின் பரிமாணங்களும் பெண் உரிமையின் விளக்கங்களும்.பெண்கள் கல்வி ஆய்வு வெளியீடு.

10. சித்திரலேகா மௌனகுரு. (1993) பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகள். கொழும்பு குமரன் புத்தக இல்லம்.